# நிறைவேற்றுச் சுருக்கம்

- 2015 ஜனவரி முதல் அரசாங்கத்தின் செயல் நிறைவேற்றம் தொடர்பிலான கருத்து கேட்ட போது, இலங்கையர்களில் 1.1% மட்டும் அரசாங்கத்தின் செயல் நிறைவேற்றம் மிகச் சிறப்பானது எனவும் எந்தவித மேம்பாடுகளும் செய்யத் தேவையில்லை எனவும் குறிப்பிட்டனர். 42.3% செயல் நிறைவேற்றம் நல்லது ஆயினும் அரசாங்கம் சிறந்த பெறுபேறுகள் காட்ட வேண்டும் எனக் குறிப்பிட்டனர். 23% அரசாங்கத்தின் செயல் நிறைவேற்றம் கூடாது ஆயினும் பெறுபேறுகள் வழங்க அதற்கு மேலும் காலம் வழங்கப்பட்ட வேண்டும் என்பதை நம்புவதாகவும் தெரிவித்தனர். 16.5% செயல் நிறைவேற்றம் மிகவும் கூடாது எனவும் அரசாங்கம் மிக விரைவில் வாக்குகளால் தோற்கடிக்கப்பட வேண்டும் எனவும் நினைக்கின்றனர்.

- 2015 ஜனவரி முதல் அரசாங்கத்தின் செயல் நிறைவேற்றம் நல்லது என வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ளவர்களில் ஏறத்தாள 75% நம்புகின்றனர், இதுவரையில் வட மத்திய, ஊவா மற்றும் சபரகமுவ ஆகிய மாகாணங்களிலுள்ளவர்களே அரசாங்கத்தின் செயல் நிறைவேற்றம் தொடர்பில் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளனர். தென் மற்றும் வட மத்திய மாகாணங்களில் ஏறக்குறைய 30% 2015 ஜனவரி முதல் செயல் நிறைவேற்றம் மிகவும் கூடாது எனவும் அரசாங்கம் மிக விரைவில் வாக்குகளால் தோற்கடிக்கப்பட வேண்டும் எனவும் கூறினர்.

- அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறை தொடர்பில் மக்களை அறிவுறுத்துவதில் அரசாங்கம் எந்தளவு வெற்றி கண்டுள்ளது எனக் கேட்ட போது, இலங்கையர்களில் 55.1% அரசாங்கம் தோல்வி கண்டுள்ளதாகவும், ஏறக்குறை 30% அரசாங்கம் பெருமளவு தோல்வி கண்டுள்ளதாகவும் கூறுகின்றனர். 55% (30.8% மிகவும் தோல்வி கண்டுள்ளது எனக் குறிப்பிட்டவர்களில்) அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில் அரசியலமைப்புச் சபை மற்றும் அதன் உபக் குழுக்களில் கலந்துரையாடப்படும் விடயங்களின் உள்ளடக்கம் தொடர்பில் விளம்பரப்படுத்துவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது எனக் கூறுகின்றனர். இலங்கையர்களில் 56.4% புதிய அரசியலமைப்பில் என்ன உள்ளடக்கப்பட வேண்டும் / என்ன மாற்றப்பட வேண்டும் என பிரஜைகளது கண்ணோட்டத்தைப் பெறுவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது எனவும் தெரிவித்தனர்.

- முழுமையாக நோக்குகையில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் 2016 ஆய்வினை ஒப்பிடும் போது அரசியலமைப்புச் சீர்திருத்த செயல்முறை தொடர்பான விழிப்புணர்வு ஓரளவு அதிகரித்துள்ளது. 2016 ஒக்டோபரில் 22% தத்துடன் ஒப்பிடுகையில் 2017 மார்ச்சில் இலங்கையர்களில் 29% அவர்கள் ஓரளவு அறிந்து வைத்துள்ளார்கள் எனக் குறிப்பிட்டனர். அரசியலமைப்புச் சீர்திருத்த செயல்முறை நிகழ்வது தொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லை எனக் குறிப்பிட்டவர்களின் எண்ணிக்கை 24% லிருந்து 12% ஆக குறைந்துள்ளது.

- தற்போதைய அரசியலமைப்பானது முழுமையாக புதியதொரு அரசியலமைப்பாக மாற்றப்பட வேண்டுமா அல்லது தற்போதை அரசியலமைப்பானது தேவையான சில மாற்றங்களை உள்ளடக்கி தொடர்ந்து இருத்தல் வேண்டுமா எனக் கேட்ட போது, இலங்கையர்களில் 23.5% எமக்கு புதியதொரு அரசியலமைப்பு தேவை எனக் குறிப்பிட்டனர் அதேவேளை 38.9% தற்போதை அரசியலமைப்பானது தேவையான சில மாற்றங்களை உள்ளடக்கி தொடர்ந்து இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டனர்.

- நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை முழுமையாக ஒழித்தலுக்கான ஆதரவு சற்று குறைந்துள்ளது. 2016 ஒக்டோபரில் முழுமையாக ஒழித்தலுக்கு இருந்த 35.7% அதரவு 2017 மார்ச்சில் 30.1% ஆகக் குறைந்துள்ளது. மேல் மாகாணத்தில் ஆதரவு (36.7% லிருந்து 29.6%) ஆகவும், வட மத்திய மாகாணத்தில் (48.6% லிருந்து 30.8%) ஆகவும், ஊவா மாகாணத்தில் (32.8% லிருந்து 21.1%) ஆகவும் மற்றும் சபரகமுவா மாகாணத்தில் (44% லிருந்து 29.5%) ஆகவும் குறைந்துள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை முழுமையாக ஒழித்தலை ஆதரிக்கவில்லை எனக் குறிப்பிடுபவர்களின் எண்ணிக்கை மத்திய மாகாணத்தில் (27.4% லிருந்து 40.8%) ஆகவும், ஊவா மகாணத்தில் (32.8% லிருந்து 59.6%) ஆகவும் மற்றும் சபரகமுவா மாகாணத்தில் (40.8% லிருந்து 50.2%) ஆகவும் அதிகரித்துள்ளது.

- இவ் ஆய்வில், சர்வஜன வாக்கெடுப்பு என்பது என்ன எனத் தெரியுமா எனக் கேட்ட போது, இலங்கையர்களில் 62.1% ஆம் எனத் தெரிவித்தனர் அதேவேளை 37.3% இல்லை எனத் தெரிவித்தனர். சபரகமுவா மாகாணத்திலிருந்து 88% வீதமும், வட மேல் மாகாணத்திலிருந்து 82% வீதமும் மற்றும் வட மத்திய

மாகாணத்திலிருந்து 70% வீதமும் சர்வஜன வாக்கெடுப்பு என்பது என்ன எனத் தெரியும் எனக் குறிப்பிட்டதுடன் அதேவேளை கிழக்கு மாகாணத்தில் 54.6% வீதமும் வடக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் 50% வீதத்தினர் அவர்களுக்கு சர்வஜன வாக்கெடுப்பு என்பது என்ன எனத் தெரியாது எனக் குறிப்பிட்டனர்.

- சர்வஜன வாக்கெடுப்பு என்பது என்ன எனத் தெரியும் எனக் குறிப்பிட்டவர்களிடம் அர்த்தமுள்ள அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை கொண்டிருப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று அவசியமா எனக் கேட்ட போது இலங்கையர்களில் 85.6% தேவை எனக் குறிப்பிட்டனர். எவ்வாறாயினும் தெற்கு மாகாணத்திலிருந்து 21.4% மற்றும் கிழக்கு மாகாணத்திலிருந்து 17.7% இலங்கையில் சர்வஜன வாக்கெடுப்பினை நடத்தாது அர்த்தமுள்ள அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை ஏற்படுத்த முடியும் என நம்புகின்றனர்.

- இலங்கையர்கள் தற்போது அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டும் எனக் கருதும் பிரதானத் துறைகளாக (1) பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி (2) சட்டமும் ஒழுங்கும் (3) ஊழல் எனக் குறிப்பிடுகின்றனர். இந்தத் தெரிவானது ஐந்து பிரதான துறைகளின் பட்டியலில் இருந்து எடுக்கப்பட்டதுடன், ஏனைய இரண்டு துறைகளும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் மற்றும் நல்லிணக்கமாகும். அவர்களது முதல் தெரிவின் (பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி) அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டிய குறிப்பிட்ட அம்சம் என்னவெனக் கேட்ட போது, மக்களது வாழ்க்கைச் செலவினைக் குறைத்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டனர்.

- இலங்கையில் ஒரே நேரத்தில் அரசியலமைப்பு சீர்திருத்த செயல்முறையும் நிலைமாற்று நீதி செயல்முறையும் இடம்பெற வேண்டுமா அல்லது ஒன்றினைத் தொடர்ந்து இன்னொன்று நடைபெற வேண்டுமா எனக் கேட்ட போது, 46.5% இலங்கையர்கள் அவர்களுக்குத் தெரியாது எனவும் 20% இரண்டு ஒரே நேரத்தில் இடம்பெற வேண்டும் எனக் குறிப்பிட்டனர். வடக்கு மாகாணத்தில் 40.4% இரண்டு ஒரே நேரத்தில் இடம்பெற வேண்டும் எனத் தெரிவித்தனர்.

- இலங்கையர்களில் 66.2% அரசியலமைப்பு சீர்திருத்தம் மற்றும் நிலைமாற்று நீதியை விட அரசாங்கம் கையாள வேண்டிய முக்கியமான பிரச்சினைகள் காணப்படுவதாக நம்புகின்றனர். இந்த கருத்தானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தவிர அனைத்து மாகாணங்களினதும் கருத்தாகும். மிக முக்கியமான பிரச்சினைகளைக் குறிப்பிட்டுக் கூறுமாறு கேட்ட போது, தரப்பட்ட பதில்கள் பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி அடிப்படையானவை – அவை வாழ்க்கைச் செலவு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, நாட்டின் பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பின்மை ஆக இருந்தது.

Centre for Policy Alternatives

Opinion Poll on Constitutional Reform – March 2017

Full report – http://www.cpalanka.org/wp-content/uploads/2017/04/Rapid-survey_final-report_March-2017.pdf